# சமய இலக்கியங்களில் – சிற்றிலக்கிய வாழ்வியல் கோட்பாடுகள்

# In the Religious Literatures - The Principles of Miniaturization

*முனைவர் த. சமுத்திரராஜ்*
தமிழ் உதவிப் பேராசிரியர்
அறிஞர் அண்ணா கல்லூரி, (கலை அறிவியல்)
கிருஷ்ணகிரி, தமிழ்நாடு, இந்தியா

**Dr. D. Samuthiraraj**
*Assistant Professor in Tamil*
*Arignar Anna College, (Arts Science)*
*Krishnagiri, Tamil Nadu, India*

## ஆய்வுச் சுருக்கம்

*மொழி என்பது இறைவனைப் போன்று அனாதி ஆனது அன்று. மனித சமுதாயம் எப்படிச் சிந்திக்கின்றதோ அந்த நிலையில் வளர்வது மொழியாகும். அவ்வகையில் தமிழோடு தொடர்பு கொண்டு மனித சமுதாயத்தைப் பண்படுத்தியவை சமய இலக்கியங்கள் ஆகும். சமய இலக்கியங்கள் இம்மை வாழ்வில் செம்மையாக வாழ்ந்தால் இறைவனின் திருவடி அரிதாகக் கிடைக்கும் என்பதை வலியுறுத்துகின்றன. சமண, பௌத்த இலக்கியங்களும் சைவ, வைணவ இலக்கியங்களும், கிறிஸ்தவ, இசுலாமிய இலக்கியங்களும் தமிழோடு உறவாடியமையும் தமிழை வளர்த்தமையும் போற்றற்குரியன. மனித வாழ்வைப் பக்குவப்படுத்தி, தனிமனித, சமுதாய ஒழுகலாறுகளைக் கற்பித்தவை இச்சமய இலக்கியங்களே எனலாம். இருப்பினும், சைவசமயம் பன்னிருதிருமுறைகள் வழியும் சைவ சித்தாந்த சாத்திரங்கள் வழியும் தமிழுக்குச் செய்துள்ள தொண்டு அளப்பரியது ஆகும். சைவத்தைப் போன்றே வைணவமும் தமிழை வளர்ப்பதையும் தமிழ் வைணவத்தை வளர்ப்பதையும் பன்னிரு ஆழ்வார்களின் சமயத் தொண்டு வழியாகவும் அவர்களது பாசுரங்களின் தொகுப்பாகிய நாலாயிரத்திவ்யப் பிரபந்தத்தின் வழியாகவும் அறிய முடிகின்றன. இருப்பினும், தமிழ்மொழி ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அந்தந்தச் சூழலுக்கு ஏற்ப இலக்கியங்களைப் பெற்றுள்ளது. தமிழால் சமயங்களும் சமயங்களால் தமிழும் வாழ்ந்து வருவதை இன்றும் காண முடிகின்றன. உலகத்தில் பல நாடுகளில்*

## Abstract

*Language is eternal as God. Language is the state in which human society develops in the same state as it thinks, and it is the religious literatures which have been associated with Tamil and have cultivated human society, and the religious literature stresses that if we live in harmony in this life, the image of The Lord of God will be rare. Jaina, Buddhist literature, Saiva, Vaishnava literature, Christian and Islamic literature are associated with Tamil and the development of Tamil is worth celebrating. It is these religious literatures which have enriched human life and inculcated individual and social disciplines. Nevertheless, the service rendered to Tamil through the two traditions of saivite religion and the saiva siddhanta shastras is immense. Like Saivism, vaishnava can be traced back to the cultivation of Tamil and the cultivation of Tamil Vaishnava through the religious service of the Paniru Azhwars and through the collection of their hymns, the Nalayirathivya Prabandham. It can still be seen that religions are being lived by Tamil and Tamil by religions. In many countries*

*பக்தியுணர்வும் சமய வளர்ச்சியும் இருப்பினும் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் தொடர்பாகத் தோன்றிய பக்தி உணர்வும் சமய வளர்ச்சியும் தனித்தன்மை வாய்ந்தவை. இதனால், தமிழ்மொழியை முறையே "சங்கத்தமிழ்" "தெய்வத்தமிழ்" "வளரும் தமிழ் என வழங்குவது மிகப் பொருத்தமாகும். கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. பதினேழாம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியை இடைக் காலத் தமிழ் என்று வரையறை செய்யப்படுகின்றன. காரைக்காலம் மையார் புராணம், சமய இலக்கியங்கள், கம்ப இராமாயணம், வில்லிப்பாரதம், போன்ற நூல்களில் காணப்படும் சிற்றிலக்கிய வாழ்வியல் நெறிமுறைகள் சார்ந்தக் கருத்துக்கள் அதிகம் என்றாலும் இலக்கண நூலான தொல்காப்பியம் மற்றும் பக்தி இலக்கியமான தேவாரம், நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் வெளிப்படுத்தும் வாழ்வியல் கருத்துக்கள் அன்றாட வாழ்க்கை முறையில் நம்மோடு செயல் வடிவமாக பயணிக்கிற சூழலில், சமய இலக்கியங்களில் சிற்றிலக்கியம் எடுத்துரைக்கும் சில வாழ்வியல் செய்திகளை இக்கட்டுரையின் வாயிலாக சான்றுகளோடு பார்ப்போம்.*

***முக்கியச்சொற்கள்:*** *தொல்காப்பியம், தேவாரம், நாலாயிரத்திவ்யப் பிரபந்தம், இலக்கியம்*

*of the world, there is a sense of devotion and religious development in many countries of the world. Therefore, it is more appropriate to refer to this Tamil language as 'Sanga Tamil', 'Deiva Thamizh', 'Growing Tamil'. From the sixth century A.D. to the 6th century A.D. The period up to the seventeenth century is defined as medieval Tamil. Karaikalammaiyar Puranam, Religious Literatures, Kamba Ramayanam, Villipharatham, etc., are found in books such as the Villipharatham, etc., though there are many ideas related to the ethics of the literature, but there are a number of ideas related to the ethics of the literature, but there are a few ideas of life which are expressed in the book of religions, such as Thevaram and the bhaktiloka thevaram, the Nalayira divya prabandham, the life concepts expressed in the present way of life as a form of activity for us in the present way of life.*

***Keywords:*** *Tholkappiyam, Thevaram, Religious Literature, Small Literature, Principles of Life, Grammar*

**Citation**

Samuthiraraj, D. "In the Religious Literatures - The Principles of Miniaturization." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 1–6.

**முன்னுரை**

*இலக்கியத்தைப் படித்ததனால் இலக்கணம் எழுதியது உலக இயல்பாக அமைந்தன. இதனால், தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் மிகவும் பழமை வாய்ந்ததாக அறிய முடிகின்றன. இன்நூலுக்கு முன்பும் பல்வேறு இலக்கியங்கள் இருந்திருத்தல் கூடும் என்பது தான் விவாதப் பொருளாகும். இச்செய்திகள் பற்றி விரிவாக ஏதுவும் கிடைக்கவில்லை. இருப்பினும், தொல்காப்பியம் கூறும் இலக்கண நூல்களே காலத்தின் காட்டயத்தில் தனித்த இலக்கியங்களாக உறுவெடுத்திருக்கின்றன. இதற்கான, சான்றுகளும் உள்ளன. இருப்பினும், சமய இலக்கியங்களில் வாழ்வியல் கோட்பாடுகளாக சிற்றிலக்கியங்களின் கருத்துக்களும் பொருந்துவனவாக இருக்கின்றன.*

**தோற்றம்**

***குழவி மருங்கினும் கிழவதாகும் (தொல். புறம். 84)***

*என்ற நூற்பவே பிற்காலத்தில் பிள்ளைத் தமிழ் என்ற இலக்கிய வகை தோன்றுவதற்கு காரணமாயிற்று எனலாம்.*

***காமப்பகுதி கடவுளும் வரையார்***
***ஏனொர் பாங்கினும் என்மனார்புலவர் (தொல். புறம். 83)***

*என்ற நூற்பாவினால் பெரிய திருமடல், சிறிய திருமடல் போன்ற இலக்கியங்கள் தோன்றுவதற்கு தொல்காப்பியர் காலத்தில் இடமளித்து இருக்கிறது என அறிய முடிகின்றன.*

***கூத்தரும் பாணரும் பொருணரும்விறலியும்***
***ஆற்றிடைக்காட்சி உறழத்தோன்றிப்***
***பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்***
***சென்றுபயன் எதிர்ச் சொன்னபக்கமும் (தொல். புறத். 90)***

*என்ற நூற்பவானது ஆற்றுப்படை நூல்களைக் குறிக்கின்றன. இதுவே, பிற்காலத்தில் ஆற்றுப்படை சிற்றிலக்கியங்களுள் ஒன்றாக வைத்து எண்ணப்படுகிற வள்ர்ச்சி நிலையினை அடைந்தன.*

***ஊரொடு தோற்றமும் உரித்து என மொழிப (தொல். புறத். 85)***

*என்ற நூற்பாவிற்கு உரை எழுதியோர் உலாநூல் வகையின் வளர்ச்சியைச் சுட்டுகின்றன என கூறியுள்ளனர். இதுவே காலப் போக்கில் கோவை, பரணி, கலம்பகம், பள்ளு, குறவஞ்சி, அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்கள் சங்ககாலத்திற்குப் பின்தோன்றி வளர்ந்தன.*

**பெயர்க்காரணம்**

*தமிழ்மொழியில் உள்ள இலக்கியங்களைப் பேரிலக்கியம் என்றும், சிற்றிலக்கியம் என்றும், இருவகையாகப் பிரித்து அறம், பொருள், இன்பம், வீடு ஆகியனவற்றை உட்பொருளாகக் கொண்டுள்ள இலக்கியங்களைப் பேரிலக்கியம் என்றும், புலவர்கள், தெய்வம், வள்ளல்கள், அருளையும் பொருளையும் பெறக் கருதிப் பாடிய சிறுநூல்கள் அனைத்தினையும் சிற்றிலக்கியம் என்றும் வகைமைப்படுத்தினர். சிற்றிலக்கியங்களை இலக்கண வரம்புக்குள் அடக்கிக் காட்டியவை பாட்டியல் நூல்களாகும். இவைகள் இருவகையாக பிரிக்கப்பட்டன. 1. எழுத்து 2. சீர் 3. சாதி 4. கணம் 5. நட்சத்திரம் ஆகியனவற்றை வகுத்துக் கொண்டு பொருத்தம் கூறுவது மற்றொன்று சிற்றிலக்கிய வகைகளுக்கு இலக்கணம் வகுப்பவையாக அமைந்திருந்தன.*

*சிற்றிலக்கிய வகைகளுள் இன்று 40 மட்டுமே வாழும் இலக்கியங்களாக விளங்குகின்றன. வாழ்வியல் கோட்பாடு இவற்றில் ஏறத்தாழ 15 மட்டுமே மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றசிற்றிலக்கியங்களாகப்பயன்பாட்டில்உள்ளன.சிற்றிலக்கியத்தின்வடிவம்,கட்டமைப்பு, போன்றவை சிந்திக்கதக்க கூடியதாக அமைகின்றன. உலா, தூது நூல்களுக்குக் கலிவெண்பா, பிள்ளைத் தமிழுக்குச் சந்த விருத்தங்கள், பரணிக்குத் தாழிசைகள், கலம்பகத்திற்குப் பலவகைப் பாவினங்கள் என வடிவமைப்பு அமைகின்றன. இதனை, கற்பனையோடும்பொருளடக்கத்தோடும் இந்தக் கட்டமைப்பு, ஒருமைப்பாடு கொண்டு பார்த்தமேயனால், இவைகள் சிறு சிறு காப்பியங்களாக சிந்தனைக்கு தோன்றுகின்றன. காலச்சூழ் நிலைக்கேற்பப் புதிய சிற்றிலக்கிய நூல்கள் தோன்றி வளர்ந்தன.*

**விருந்தேதானும்**

***புதுவது கிள்ந்தயாப் பின்மேற்றே (தொ. செய்.237)***

**திருப்பாவையின் அமைப்பு**

*சிற்றிலக்கிய வகைகளில் பாவை இலக்கிய வகையும் ஒன்றாக பார்க்கப்படுகின்றன. 30 பாசுரங்களைக் கொண்டது ஆண்டாள் பாடிய திருப்பாவை. இதில் முதல் 5 பாவை திருவிழாவினை கூறுவதாகவும், அடுத்த 10 பாசுரங்கள் உறங்குகின்ற தோழியார்களை எழுப்புவதாகவும், அடுத்த 6 பாசுரங்கள் கோயில் காப்பவன், வாயில் காப்பவன், நந்தகோபன், யசோதை, நப்பின்னை, கண்ணண், பலராமன் ஆகியோரைத் துயில் எழுப்புவதாகவும், அடுத்த நான்கு பாசுரங்கள் கண்ணனை எழுப்பியப்பின் அவனது அருளைப் பெற வேண்டி நிற்பதாகவும், இறுதியில் வருகின்ற 5 பாசுரங்கள் கண்ணனிடம் வேண்டுபவனற்றைக் கேட்பதாகவும் அமைந்துள்ளன.*

*திருப்பாவை மிகப் பலரால் போற்றிப் பாடப் பெறும் சிறப்பிற்கு உரியது. சிறப்பாக, மார்கழி மாதந்தோறும் வைணவத் தளங்களில் பக்திதிறத்தோடு பாடப் பெற்று வருகின்றன.*

***மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்***
***நீராடப்போது வீர்போதுமிணோ நேரிணைழயீர்***
***சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்***
***கூர்வேல் கொடுந்தொழிலன் நந்கோபன்குமரன்***
***ஏராந்தகண்ணிய சோதை இளஞ்சிங்கம்***
***கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான்***
***நாராயணனே நமக்கே பறை தருவான்***
***பாரோர் புகழப்படிந்தளோர் எம்பாவாய்.***

*நீராட வருவீர்களாக! என்று ஆயர்பாடிச் செல்வச் சிறுமியர்களே! நோக்கி வினாவுவதாகவும் அமைந்துள்ளன.*

**தமிழ் விடுதூது**

*தூது இலக்கியமும்சிற்றிலக்கியவகைகளில்ஒன்று.தலைவனதுவரவினைஎதிர்பார்க்கும் தலைவி, அவனிடம் தன்மனக்கருத்தினை சொல்லும் விதத்தினை தூதுப்பொருளிடம் கூறுதலாகும். தமிழ் மட்டுமேயன்றி வடமொழியிலும் தூது இலக்கியம் காணப்படுகின்றன.*

*காளிதாசருடைய மேகதூதும் இதற்கு சான்றாக குறிப்பிடலாம். தூது இலக்கியங்களை இரண்டு வகையாகப் பிரிக்க முடிகின்றன. 1. புறத்தூது 2. அகத்தூது என்பவையாகும். ஓர் அரசன் மற்றோர் அரசனிடம் அனுப்பும் தூதும், ஒரு புலவர் ஒரு புலவர் ஓர் அரசனிடம் அனுப்பும் தூது புறத்தூதாகும். தலைவி தலைவனிடமோ, தலைவன் தலைவியிடமோ அனுப்பும் தூது அகத்தூதாகும் இவ்விருவகைகளுக்கு சங்கப் பாடல்களிலும் (அன்னம், தோழி) சான்றுகள் காணப்படுகின்றன.*

**எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் இரண்டாம் பாடலில்,**

***மண்டிணிந்த நிலனும்***
***நிலனேந்திய விசும்பும்***
***விசும்புதை வருவளியும்***
***வளித்தலை இயதீயும்***
***தீமுரணிய நீருமென்றாங்கு***

*என்ற கருத்து கி.பி.5ம் நூற்றாண்டில்தான், காரைக்காலம்மையார் இயற்றிய அற்புதத்திருவந்தாதியே முதல் அந்தாதி நூலாகும். இது தனி இலக்கிய வடிவமும் பெற்றன.*

***அந்த முதலாத்தொடுப்பது அந்தாதி***
***அசையினும்சீரினும்அடிதொறும்இறுதியை***
***முத்தாதிசைப்பின அந்தாதித் தொடையே***

*எனயாப் பெருங்காலக்காரிகை அந்தாதியிலக்கணம் கூறுகின்றன. ஒரு பாடலின் இறுதியிலுள்ள எழுத்தோ அசையோ, சீரோ அடுத்த பாடலுக்கு முதலாக வருவது அந்தாதி, தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் நால்வகை அமைப்புடைய அந்தாதிகள் காணப்படுகின்றன. இக்கருத்துக்கள் மனிதனுக்கு அமைதியை தருகின்ற இசைக்கும் கூத்துக்கும் அடிப்படையாக அமைகின்றன.*

***நல்நுதல்விறலியர் (பதிற்று. 161)***

*இது போன்று மனித வாழ்விற்கு முன்னுதரணமாக சிற்றிலக்கியச் செய்திகள் மனிதனை வழி நடத்துகின்றன. இச்செய்திகளை செய்தியாகவே பார்க்கின்றனர் இதை வாழ்வியலுக்கு ஏற்றுக் கொள்ள மனித மனம் மாறுக்கின்றன.*

**சமய இலக்கியம்**

*திருஞானசம்பந்தர் -வெந்தவெண்நீறுணிந்து 3 ஆம் திருமுறை மனிதன் தினந்தோறும் நெற்றியில் திருநீற்றை பூசுவதின் அவசியத்தை அறிவுறுத்துகின்றன. திருநாவுக்கரசர் - செற்றுணை வேதியன் 4ஆம் திருமுறை, சுந்தரர் - பொன்னார்மேனியனே, மாணிக்கவாசகர் - திருவாசகம், நம்மாழ்வார், அருணகிரிநாதர் - திருப்புகழ், திருவருட்பா 6 ஆம் திருமுறை, கண்ணதாசன் - இயேசு காவியம், குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் ஆகியவை எல்லாம் காலந்தோறும் பக்தி இலக்கியம் வளர்ந்துள்ளமைக்கு சான்றுகளாகவும் வாழ்வியல் நெறிமுறைகளை எடுத்துரைப்பவனாகவும் அமைகின்றன. இச்செய்திகளை வேத நூற்களால் உணர்வது, புராண இதிகாசங்களால், குறிப்பாக, மகாபாரதத்தால் உணரமுடிகின்றன.*

**முடிவுரை**

*மேற்கூறியவற்றில் இருந்து, இன்றைய உலகம் அறிவியல் முதிர்ச்சியாலும் அறிவியல் கண்டுப்பிடிப்புகளாலும் மிகவேகமாக வளர்ந்து வருகின்றன. அன்றைய கால மக்கள் எந்தவித ஒழுக்கநெறி முறைகளை பின்பற்றினார்களோ அதுப் போன்ற ஒழுக்க நெறிமுறைகளை இக்கால மக்களும் வருங்கால மக்களும் பின்பற்றி வரவேண்டும் அப்பொழுது தான், உலகில் மனிதர்களின் வாழ்க்கை பூரணத்துவம் பெற்றதாக அமையும். ஆனால், காலப்போக்கில் மக்களின் மாறும் மனநிலையால் சுய நலப்போக்கால் நெறிமுறைகளை மீறிய வகையில் வாழ்ந்து வருகின்றன. இதனால், மனிதர்களின் வாழ்வியல் கோட்பாடுகளை நிலை நிறுத்த முடியாமல் நிலை பொற தன்மையினை பெறுகின்றன.*

**பார்வை நூல்கள்**


1. *டாக்டர் கி. ஆதிநாராயணன், சிற்றிலக்கிய வகையும் வகைமையும், பக். 1, 16, 19, 21, பாரி நிலையம், சென்னை.*
2. *ஞா. மாணிக்கவாசகன், பதிற்றுப்பத்து, பக், 161, உமா பதிப்பகம், சென்னை.*
3. *டாக்டர் ப. அருணாசலம், பக்தி இலக்கியம், பக், 28, பாரி புத்தகப் பண்ணை, சென்னை.*
4. *முனைவர் க. திலகவதி, புறநானூறு, பக், 3, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.*
5. *டாக்டர் சு. சக்திவேல், தமிழ்மொழி வரலாறு, பக், 155, 12, மாணிக்கவாசர் பதிப்பகம், சென்னை.*


## References


1. *Adinarayanan, K., Sitrilakiya Vagayum Vagamayum, pp.1,16,19,21, Pari Nilayam, Chennai.*
2. *Manickavasagan, P.R., Pathiruppattu, P.161, Uma Publishing House, Chennai.*
3. *Arunachalam, P., Bhakti Literature, P. 28, Pariputhaga Pannai, Chennai.*
4. *Thilakavathi, K., Purananuru, P.3, New Century Book House (P) Ltd., Chennai.*
5. *Sakthivel, S., Tamil Mozhi Varalaru, pp.155,12, Manikkavasar Publishing House, Chennai.*